**சென்னை-6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (மேல்நிலை)-ன் செயல்முறைகள்**

**முன்னிலை : க. செல்வகுமார், MA., B.Ed.,**

**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**ந. க. எண். 203917 / எச் 1 / 2024** **நாள்.26.02.2024**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள்** : அரசுத் தேர்வுகள் இயக்ககம் - சென்னை - 06 - மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு - மார்ச் - 2024 - மாற்றுத் திறனாளி சலுகைகள் - அரசாணையில் குறிப்பிடப்படாத நோய்களுக்கு சலுகைகள் கோரியமை - சலுகைகள் வழங்கி ஆணையிடுதல் - தொடர்பாக

**பார்வை** :

1. சென்னை மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக உதவி இயக்குநர் அவர்களின் கடித ந. க. எண். 011665 / அ1 / 2024, நாள். 01.02.2024 மற்றும் 09.02.2024.
2. சிவகங்கை மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக உதவி இயக்குநர் அவர்களின் கடித ந. க. எண். 004698 / அ1 / 2024, நாள். 21.02.2024.
3. அரசாணை (நிலை) எண். 62, பள்ளிக் கல்வி (அ.தே.) த் துறை நாள். 25.03.2022.
4. அரசாணை (நிலை) எண்.54, பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை, நாள்.29.02.2016.

*****

பார்வை 1- ல் காணும் சென்னை மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக உதவி இயக்குநர் அவர்களின் கடிதங்களில், C. S. I. BAIN SCHOOL, Kilpauk. Chennai - 10 என்ற பள்ளியில் பயிலும் மாணவி செல்வி. மஹிமா அருண் மற்றும் பெரியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி பெரியார் நகர், சென்னை-82 என்ற பள்ளியில் பயிலும் மாணவர் செல்வன். ஆ. ராஜேஷ் ஆகிய இருவருக்கும் சிறுநீரக கோளாறு காரணமாக மருத்துவமனையில் டையாலிசிஸ் செய்து வருவதாக தெரிவித்து, மேற்கண்ட நோயானது பார்வை 3-ல் காணும் அரசாணையில் குறிப்பிடப்படாததால், மேற்கண்டவாராக உள்ள இருவருக்கும் சிறப்பு நிகழ்வாக, மார்ச் 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின்போது சொல்வதை எழுதுபவர் நியமனம் செய்ய வேண்டுமாய் கோரப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 2- ல் காணும் சிவகங்கை மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில், மார்ச் - 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பித்துள்ள தேர்வர் பி. தேவதர்ஷினி என்பவருக்கு எலும்பு புற்றுநோய் காரணமாக மருத்துவமனையில் கீமோதெரெபி சிகிச்சை பெற்று வருவதாகவும், இதனால் கைகளில் நரம்புகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், மார்ச் - 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுக்கு தேர்வின் போது கூடுதல் ஒரு மணி நேரம் மட்டும் வழங்க வேண்டுமாய் கோரப்பட்டுள்ளது.

மேற்காண் சென்னை மற்றும் சிவகங்கை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களின் கடிதங்களில் மார்ச் 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்க சலுகைகள் கோரி பரிந்துரைக்கப்பட்டுள்ள மாணாக்கர்கள், மாணவி மஹிமா அருண், மாணவர் ஆ. ராஜேஷ், மற்றும் தனித்தேர்வர் பி. தேவதர்ஷினி ஆகியோர் சிறுநீரக கோளாறு மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உரிய மருத்துவச் சான்றுகளின் அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் சென்னை மற்றும் சிவகங்கை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களின் பரிந்துரையின் ஏற்று, இம்மாணாக்கர்களின் எதிர்கால நலன் கருதி அரசாணையில் குறிப்பிடப்படாத நோய்களுக்கு பட்டியலில் கண்டுள்ளவாறாக சலுகைகள் வழங்கி ஆணையிடப்படுகிறது.

மேலும், பார்வை 4-ல் காணும் அரசாணையின்படி, சொல்வதை எழுதுபவர் நியமனத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை முறைப்படி கடைபிடிப்பது தொடர்பாக உரிய அறிவுரையை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு தெரிவித்து தேர்வினை எவ்வித புகாருக்கும் இடமின்றி நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு .**

சலுகைப் பட்டியல்.

**ஒம்/-**

**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**பெறுநர்**

உதவி இயக்குநர்கள்,

அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்,

சென்னை மற்றும் சிவகங்கை.